கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் - உயர் தரம்

# கிறிஸ்தவ நாகரீகம்

## பாடத்திட்டம்

(2009 ஆம் ஆண்டிலிருந்து தரம் 12 இற்கும் 2010 ஆம் ஆண்டிலிருந்து தரம் 13 இற்குமானது)

சமயக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

## 1.0 அறிமுகம்

சமய நெறியைப் புறக்கணித்துவிட்டு ஒழுக்க விழுமியங்கள் நிறைந்ததொரு சமூகத்தை எதுவிதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே சமயவிளக்கம் மிகவும் அத்தியாவசிய மான ஒன்றாக உள்ளது. இத்தகைய சமய விளக்கத்துடனான வாழ்வானது மிகவும் பெறுமதி வாய்ந்தது. இதன் இயல்பாகவே ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகமொன்று உருவாகும்.

கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் இதுவரைகாலமும் நோக்கங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கலைத்திட்டமானது, அத்தத்துவத்தைக் கடந்து தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்ட தத்துவத்துடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதற்கிணங்க ஒரு கிறிஸ்தவன் தனது சமயத்தின் வழியாக எத்தகைய சமயத் தேர்ச்சிகளை தனது வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ள வேண்டுமென்பதைச் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது. அவ்வவ் தேர்ச்சிகளின் விருத்தியுடன் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய விதம் கவனத்திற்குரிய தொன்றாகின்றது. இதற்காகப் பொருத்தமான கற்பித்தல் நுட்பமுறைகளை உறுதிப்படுத்துகின்ற வகுப்பறைச் செயன்முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் ஒரு அலகு அல்லது பல அலகுகளை அடிப்படையாகக்கொண்டு ஆறாம் தரத்தில் எளிமையான அறிமுகத்துக்கும் பதினொராம் தரத்தை அடையும் போது இவ்வலகுகளில் கற்பிக்கப்படுகின்றவை பற்றிய ஓரளவு படிமுறை வளர்ச்சியைக் கொண்டதாக பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தரம் 11இல் பொதுக்கல்வியை முடித்துக்கொண்டு, சமய நெறியில் பல தேர்ச்சிகளை அடைந்து, தமது வாழ்வின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தமது கல்வியை முன்னெடுக்கும் மாணவர்களுக்காக தரம் 12, 13க்கான பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

திருவிவிலியத்தை ஆழமாகக் கற்று, திருச்சபையின் மறைக்கோட்பாடுகளையும், வளர்ச்சிகளையும், அதன் சமூக நோக்கையும் அறிந்து, நாட்டின் சமய, சமூக, கலாச்சார நலனுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும் முதிர்ச்சியடைந்த, முழுமையடைந்த சீடத்துவ வாழ்க்கைக்கு தம்மை அர்ப்பணிக்க மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கம்

01. கிறிஸ்தவ மறையின் ஆரம்ப வரலாற்றை விளங்கி, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவியதற்கான காரணிகளை அறிந்து கொள்ளுதல்.

02. துறவற வாழ்வையும், துறவற சபைகளைப் பற்றியும் அறிதல்.

03. பின் - மத்திய கால திருச்சபையில் சீர்திருத்தம் ஏற்படுவதற்கான காரணிகளையும் புரட்டஸ்தாந்து கொள்கையின் ஆரம்பத்தையும் அதன் தன்மையையும் விளங்கிக் கொள்ளச் செய்தல்.

04. நற்செய்தியின் உலகளாவிய தன்மையையும் கீழைத்தேச நாடுகளின் கிறிஸ்தவ நாகரீகம் பற்றியும், இந்தியாவில் கிறிஸ்தவ திருச்சபை பற்றியும் கற்பதன் வழியாக திருச்சபையில் பல்வேறு மரபுகளை விளக்கச் செய்தல்.

05. இலங்கையில் கிறிஸ்தவ சபையின் ஆரம்பத்தையும், ஐரோப்பியரின் பின்னர், கிறிஸ்தவ சபையின் ஆரம்பத்தையும், அதன் தன்மையையும் விளக்குதல்.

06. பண்பாடு, சமூக முன்னேற்றம் ஆகியவை பற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகளை செயல்படுத்தத் திட்டமிடல்.

07. கிறிஸ்தவ சபைத் தலைவர்களின் சமூக, பண்பாட்டு முன்னேற்றம் பற்றிய வழிகாட்டல்களைக் கிறிஸ்தவ வாழ்க்கையுடன் இணைத்து, அனைத்து மதங்களுடனும் சகவாழ்வு வாழப் பழகுதல்.

08. நாகரீகத்தின் பண்பாட்டுத் தன்மையைக் கற்றறிந்து கிறிஸ்தவ நாகரீகத்தின் அடிப்படைகளாக உள்ள ஏனைய நாகரீகங்களைப் பற்றி அறிந்து கொள்ளல்.

09. கிறிஸ்தவ சபையின் ஆரம்பம், தொடக்க கால திருச்சபையின் சமூக, (பண்பாட்டு) கலாச்சாரப் பண்புகள், புதிய ஐரோப்பிய கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு துறவற சபைகளின் பங்களிப்பு ஆகியவற்றை விளங்கிக் கொள்ளச் செய்தல்.

10. கிறிஸ்தவ கலாச்சாரத்தை ஆரம்பிப்பதற்கு வழிபாட்டின் பங்களிப்பையும், அதற்கான சுதேச வழிபாட்டை உருவாக்கத் தேவையான வழிமுறைகளையும் இனங்கண்டு திட்டமிடல்.

11. திருச்சபையின் கல்விப்பணியை சீர்தூக்கிப்பார்த்து புதிய, சிந்தனைகளுக்கு வழிகாட்டிய கிறிஸ்தவ அறிவியலாளர்களை அறிந்து, கலையை வளர்ப்பதற்குத் திருச்சபையின் பங்களிப்பை வெளிப்படுத்தி ஆக்கபூர்வமான பங்களிகளாக்குதல்.

12. கல்விப் பணியின் முன்னேற்றத்திற்கு திருச்சபை வழங்கிய ஒத்துழைப்பை உணர்ந்து தமது கல்விப்பணியை மேலும் வளர்க்க உருவாக்குதல்.

13. இலங்கைச் சமூகத்தின் நலனுக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் திருச்சபையின் பங்களிப்போடு நாட்டுப் பிரஜைகளுக்குரிய கடமைகளை நிறைவேற்ற திட்டமிடல்.

14. இலங்கைச் சமூகத்தில் கலையின் வளர்ச்சிக்கு கிறிஸ்தவர்களின் ஒத்துழைப்பை உணர்ந்து திருச்சபையின் பங்களிப்பை ஏற்றுக்கொண்டு, தமது திறமைகளை சமூகத்திற்கு அர்ப்பணிக்க வழிகாட்டுதல்.

15. இலங்கைத் திருச்சபையின் தன்மையை விமர்சித்து, இத்தன்மையை மனுவுருவாக்க செயற்பட ஊக்குவித்தல்

## பாடசாலைத் தவணைக்கேற்ப பாடத்திட்டத்தை வகுத்துக்கொள்வதற்கான உத்தேசத்திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சிமட்டம் | பாடவேளை |
|---|---|---|---|
| 12 | 1 | 1.1 - 2.1 | 105 |
| | 2 | 2.2 - 3.3 | 95 |
| | 3 | 4.1 - 5.2 | 100 |
| 13 | 1 | 6.1 - 7.1 | 130 |
| | 2 | 7.2 - 9.1 | 96 |
| | 3 | 9.2 - 10.3 | 74 |

## 3.0 பாடத்திட்டம்

## 3.1 தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட |
|---|---|---|---|
| **1.0 கிறிஸ்தவ மறை பற்றி சரியான கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்ள கிறிஸ்தவ நாகரீக வரலாற்றின் விழுமியங்களைப் பின்பற்றுவர்.** | 1.1 கிறிஸ்தவ மறையின் ஆரம்ப கால வரலாற்றை விளக்குவர். | ● தூய ஆவியின் வருகையும் திருச்சபையின் ஆரம்பமும்<br>◆ அறிமுகம்<br>◆ எருசலேம் சபை<br>● மத்திய தரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளில் திருச்சபை பரவுதல்<br>◆ புனித ஸ்தேவானின் மரணம்<br>◆ புனித பவுலின் மறை போதகப் பயணங்கள்<br>◆ கலாபனைகளும் சபையின் பரம்புதலும்<br>● உரோமைப் பேரரசினுள் கிறிஸ்தவ சபை அறிமுகம்<br>◆ உரோமை அரசில் மத சுதந்திரம்<br>◆ பேதகங்களும் விசுவாச வளர்ச்சியும் | 52 |
| | 1.2 மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவியமை பற்றிய விடயங்களை அவதானிப்பர். | ● கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள்<br>● ஐரோப்பிய கோத்திரங்கள் கிறிஸ்தவ மறையைத் தழுவுதல்<br>● யுத்தங்களும் ஆக்கிரமிப்பும் | 26 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **2.0 துறவற வாழ்வு ஆன்மீக கலாச்சார வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கை ஆராய்ந்து திருச்சபையின் நலன் கருதித் தம்மை அர்ப் பணிப்பர்.** | 2.1 துறவற வாழ்வு பற்றிக் கற்பதன் மூலம் திருச்சபையின் ஆன்மீகப் பாதையில் செல்வர். | ● கிறிஸ்தவ துறவற சபைகளின் ஆரம்பம்<br>● வனத்துப் பிதாக்கள்<br>ஆச்சிரம வாழ்வு, துறவற வாழ்வின் ஒழுங்கு நூல்.<br>● புனித ஆசீர்வாதப்பரின் தவ வாழ்க்கை முறையும், மறைப் போதகப் பணியும்<br>● சிஸ்டெஷியன் துறவிகள்<br>● குளுனி துறவற மடம் | 27 |
| | 2.2 திருச்சபையின் ஆன்மீக மறுமலர்ச் சிக்குக் காரணமான துறவற சபைகளையும், அமைப்புக்களையும் பற்றிய விடயங்களை ஆராய்வர். | ● இரவலர் சபைகளின் பின்னணி<br>● வல்தேசியன்<br>● பிரான்சிஸ்கன சபை<br>● டொமினிகன் சபை | 22 |
| **3.0 பின்-மத்திய யுகத் தில் திருச்சபையில் ஏற்பட்ட சீர்திருத்தத் தினால் திருச்சபை பல பிரிவு களாகப் பிரிவதற் கான காரணங் களைத் தேடியறிந்து திருச் சபையின் ஒருமைப் பாட்டிற்கு வழி வகுப்பர்.** | 3.1 பின்-மத்திய யுகத்தில் திருச்சபையில் சீர்திருத்தம் ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்களை விளங்கி திருச்சபையை நெறிப்படுத்த ஒத்துழைப்பர். | ● திருச்சபையின் சீர்திருத்தத்தின் சமயப் பின்னணி.<br>◆ ஆன்மீக சீர்கேடுகள்<br>◆ ஆன்மீக வீழ்ச்சியின் காரணிகள்<br>◆ திருச்சபையினுள் ஏற்பட்ட பிரிவுகள்.<br>● திருச்சபையின் புனரமைப்பின் சமூக அரசியல் பின்னணி<br>◆ புதிய பிராந்திய அரசு உருவாகுதல்<br>◆ உலகியல் போக்கு உருவாகுதல் | 22 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 3.2 சீர்திருத்த சபைகள உருவாகு தலையும் அதன் தன்மையையும் விளக்குவர். | ● மாட்டின் லூதர்,<br>கல்வின், ஸ்விங்ளி, தோமஸ் முன்றசர் சீர்திருத்தம்<br>● அங்கிளிக்கன் சபை உருவாகுதல்<br>● மேற்கத்தேய சபை தொடர்ந்தும் பிரிந்து செல்லுதல்.<br>ஜோண் வெஸ்லி,<br>வில்லியம் கேரி என்பவர்களின் சீரமைப்பு | 22 |
| | 3.3 சீரமைப்பு கத்தோலிக்க திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு வழிகாட்டிய விதத்தை அறிந்து திருச்சபையில் செயல்படுத்த ஒத்துழைப்பர். | ● கத்தோலிக்க திருச்சபைக்குள் புனரமைப்பு<br>● திருச்சபையின் மறைபரப்புப் பணியில் புதிய முறை<br>● திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு உதவிய துறவற சபைகள் அவற்றின் மறைபரப்புப் பணிகள்<br>◆ யேசு சபை<br>◆ வின்சென் துறவற சபை<br>◆ கார்மேல் சபை<br>◆ கப்புச்சின் பிரான்சிஸ்கன் துறவற சபை | 29 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **4.0 ஆசியாவில் கிறிஸ்தவ நாகரீகம் பரப்புதலையும் அதன் தாக்கங்களையும் முறையாக விமர்சனம் செய்து ஆசியத் திருச்சபை ஒன்றை உருவாக்க அர்ப்பணிப்பர்.** | 4.1 நற்செய்தியின் உலகளாவிய தன்மையைக் கீழைத்தேச நாடுகளின் கிறிஸ்தவ நாகரீகம் பற்றிக் கற்பதனால் உய்த்துணர்வர். | ● கிழக்கு மத்திய ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் பரம்புதல்<br>● சீனா<br>◆ மத்தேயு றிச்சி அடிகளின் பணி<br>● கொரியா, யப்பான், பிலிப்பீன்ஸ் | 15 |
| | 4.2 இந்தியாவில் கிறிஸ்தவ சபை பற்றிய ஆய்வின் மூலம் திருச்சபைச் சம்பிரதாயங்கள் பல்வேறுபட்டவை என விளக்குவர். | ● இந்தியாவில் கீழைத்தேய கிறிஸ்தவம்<br>◆ சீரோ மலபார்<br>◆ சீரோ மலங்கரா<br>◆ வைதீக சபை (ஓத்தொடொக்ஸ்)<br>◆ புனித தோமையார் கிறிஸ்தவர்கள்<br>● இலத்தீன் சபையின் ஆரம்பமும், பரம்புதலும்<br>● சீர்திருத்த சபைகள் | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **5.0 இலங்கைக் கிறிஸ்தவ நாகரீகம் தொடர் பாகக் கற்று இலங் கைக் கிறிஸ்தவராக வாழ்வர்.** | 5.1 இலங்கைக் கிறிஸ்தவ சபையின் ஆரம்பம் பற்றிய விடயங்களைத் தேடுவர். | ● அனுராதபுரத்தில் கிறிஸ்தவர்கள்<br>● புதிய அகழ்வாய்வுகளின் கண்டுபிடிப்புக்கள் | 06 |
| | 5.2 ஐரோப்பியரின் வருகையால் ஆரம்பமாகிய கிறிஸ்தவ சபையின் தன்மை பற்றிய விடயங்களைக் கற்பர் | ● போர்த்துக்கேயர் கால திருச்சபை<br>◆ பிரான்சிஸ்கன் சபை மறை பரப்பாளர்<br>◆ மன்னார் மறைசாட்சிகள்<br>◆ கரையோரப்பகுதியில் கிறிஸ்தவர்கள் பரம்புதல்<br>● ஒல்லாந்தர் கால திருச்சபை<br>◆ திருச்சபையின் கலாபனை<br>◆ ஒல்லாந்த எதிர்ப்பியக்க சபை (புரட்டஸ்தாந்தது சபை)<br>◆ முத்திப்பேறு பெற்ற யோசப்வாஸ் அடிகளாரினதும், ஒறற்றோரியன் சபைக் குருக்களினதும் மறைப்பணி<br>● ஆங்கிலேயர் கால திருச்சபை<br>◆ பலவித கிறிஸ்தவ சபைகள் பரம்புதல்<br>◆ மதச் சுதந்திரம்<br>◆ வெளி நாட்டு மறை பரப்பாளர் | 54 |

**3.2 தரம் 13**

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **6.0 கிறிஸ்தவ நாகரீகம் ஒன்றினைக் கட்டி எழுப்ப அடிப்படையாக அமையும் நாகரீக ங்களை உய்த்து ணர்ந்து நல்ல வாழ்வு வாழப் பின்னணியை அமைத்துக் கொள்வர்.** | 6.1 நாகரீகத்தினதும் பண்பாட்டினதும் தன்மையை உய்த்துணர்வர். | ● நாகரீகம் வரைவிலக்கணப்படுத்துதல்<br>● நாகரீகத்தினதும் பண்பாட்டினதும் பண்புகள் | 04 |
| | 6.2 கிறிஸ்தவ நாகரீகத்திற்கு அடிப்படையாக அமையும் நாகரீகங்கள் தொடர்பாக முறையாக ஆராய்வர். | ● மேலைத்தேச, ஆசிய, யூத நாகரீகங்கள்<br>◆ நயில் நதிக்கரை நாகரீகம்<br>◆ யூப்பிரட்டீஸ் - தைகிரிஸ் ஆற்றங்கரை நாகரீகம்<br>● விவிலிய புவியியல் பின்னணி<br>● வரலாற்றுப் பின்னணி<br>◆ விடுதலைப்பயணம்<br>◆ நீதித்தலைவர்கள்<br>◆ அரசர்கள்<br>◆ அரசு பிரிதல்<br>◆ அடிமைத்தனம்<br>◆ அடிமைத்தனத்தின் பின்னர் | 45 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 6.3 கிறிஸ்தவ மறை உருவாகிய சமூகத்தின் பின்னணியை ஆராய்வர். | ● பலஸ்தீன அரசியல், சமூகப் பின்னணி<br>◆ உரோமை நிர்வாக முறை<br>◆ ஏரோதின் ஆட்சிமுறை<br>◆ தலைமைக் குருக்களும் பொதுச் சங்கமும்<br>● கிறிஸ்துவின் கால யூத சமுதாயத்தின் சமூக, அரசியல், கலாச்சாரமும் மத மரபு முறைகளும்<br>◆ யூத சமுதாய முறைகளும், சமுதாயப் பிரிவுகளும்<br>◆ யூத மத பழக்க வழக்கங்கள் | 16 |
| **7.0 கிறிஸ்தவ நாகரீகம் உருவாகியதனால் சமுதாய கலாசாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் பயணிப்பர்.** | 7.1 கிறிஸ்தவ மத அறக்கோட்பாட்டின் ஆரம்பத்தை உய்த்துணர்ந்து இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்கு அவற்றை பயன்படுத்திக்கொள்வர். | ● கிறிஸ்தவ நாகரீகத்தின் அடிப்படை - கிறிஸ்து<br>◆ கிறிஸ்து என்றால் யார்?<br>◆ கிறிஸ்துவின் படிப்பினைகள் (மத்தேயு நற்செய்தி 5,6,7 அதிகாரங்களின் துணையுடன்)<br>● திருத்தூதர் மரபும் - படிப்பினைகளும்<br>◆ தூய ஆவியின் வருகை<br>◆ டிடாக்கே<br>◆ தொடக்க கால கிறிஸ்தவர்கள்<br>◆ புதிய சமுதாய முறையின் ஆரம்பம் | 66 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 7.2. ஆரம்ப கால கீழைத் தேய மேலைத் தேய திருச்சபையில் விளங்கிய கலாசாரப் பண்புகளை விமர்சனம் செய்வர். | ● புனித பவுலின் வாழ்க்கை<br>◆ கிறிஸ்தவ சபை நிறுவப்படல்<br>◆ முக்கிய படிப்பினைகள்<br>- இறை அருள்<br>- கிறிஸ்துவின் தலைமைத்துவம், கிறிஸ்துவின் தாழ்ச்சி<br>- உயிர்ப்பு, மறுவருகை<br>◆ ஒழுக்க விழுமியக் கோட்பாடுகள்<br>- குடும்ப வாழ்வு<br>- சகோரத்துவம் ஒற்றுமை<br>- தூய ஆவியின் கனிகளும், கொடைகளும்<br>● புதிய சிந்தனையின் ஆரம்பம்<br>● கிறிஸ்தவ கல்விக் கல்லூரி<br>◆ அலெக்சாந்திரியா,<br>◆ அந்தியோக்கியா<br>● கிரேக்க உரோம கலாசாரத்தில் புதிய ஆற்றல்<br>● ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவ சிந்தனை யாளர்களும் மறைபரப்பாளர்களும்<br>● மேற்கு ஐரோப்பிய கோத்திரங்களின் தாக்கம் | 22 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 7.3 புதிய ஐரோப்பிய நாகரீகம் உருவாக துறவற சபைகளின் பங்களிப்பை ஆராய்வர். | ● ஆசீர்வாதப்பர் சபையின் முன்மாதிரிகையான செபமும் உடல் உழைப்பும்<br>● துறவறக் கிராமங்கள், ஏழ்மையின் முன்மாதிரிகை | 07 |
| **8.0 உலக சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக திருச்சபையின் சமுதாய கலாச்சாரப் பங்கினை அறிந்து கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுவர்.** | 8.1 திருச்சபையின் கல்விச் சேவையினை ஆராய்ந்து தமது அறிவை விருத்தி செய்து கொள்வர். | ● கல்விக்காகத் திருச்சபையின் அர்ப்பணிப்பு<br>◆ நகரப்புறங்களிலும், பேராலயங்களுக்கு அருகிலும் கல்விக்கூடங்கள்<br>◆ துறவற சபைகள் கல்வியில் ஈடுபாடு<br>● பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்படல்<br>◆ பொலஞ்ச - பாரீஸ் நகரங்களில் பல்கழைக்கழகங்கள்<br>◆ ஒக்ஸ்பட், கேம்பிரிஜ், சலமன்கா பல்கலைக்கழகங்கள்<br>● விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்காக கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பங்களிப்பு | 16 |
| | 8.2. புதிய சிந்தனைக்கு வழிவகுத்த கிறிஸ்தவ சிந்தனையாளர்களை அறிந்து கொள்வர். | ● மெய்யியல் வல்லுனர்கள்<br>◆ புனித தோமஸ் அக்குவினாஸ்<br>● இறையியலாளர்கள்<br>◆ புனித அகுஸ்தீனார் | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 8.3 சிற்பக்கலைகளின் மேம்பாட்டிற்காக திருச்சபையின் பங்களிப்பை அறிந்து, உணர்ந்து ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுவர். | ● கலை மேம்பாட்டிற்காக திருச்சபையின் பங்களிப்பு<br>● நூல்களும் எழுத்தாளர்களும்,சங்கீதம்<br>● கட்டிடக்கலை, கற்சிற்பங்கள், சித்திரங்கள் | 15 |
| **9.0 இலங்கைச் சமுதாயத்தின் நலன் கருதி கிறிஸ்தவ சபையின் பங்கெடுப்பை விளக்கி சமூக மேம்பாட்டிற்காக கிறிஸ்தவராக அர்ப்பணிப்பர்.** | 9.1 கல்வியின் முன்னேற்றத்திற்காக திருச்சபை வழங்கிய ஒத்துழைப்பை விளக்கித் தமது கல்வி ஆற்றல்களை வளர்த்துக்கொள்வர். | ● வெளிநாட்டவர் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ கல்விப் பணி<br>◆ போர்த்துக்கேயர் காலம்<br>◆ ஒல்லாந்தர் காலம்<br>◆ ஆங்கிலேயர் காலம்<br>● சுதந்திரத்தின் பிற்காலம்<br>◆ கல்வித்துறையில் முன்னேற்றம்<br>◆ பாடசாலைகள் அரசமயமாக்கப்படுதல்<br>● கிறிஸ்தவ கல்வியியலாளர்கள்<br>◆ மேதகு எட்மன் பீரிஸ் ஆண்டகை<br>◆ மேதகு சிறில் அபேநாயக்க<br>◆ எஸ். ஜீ. பெரேரா அடிகள்<br>◆ பீட்டர் பிள்ளை அடிகள்<br>◆ டப்ளியூ. டொன் பீற்றர் அடிகள்<br>◆ நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்<br>◆ எச். எஸ். தாவீது அடிகள்<br>◆ சேவியர் எஸ். தனிநாயகம் அடிகள்<br>◆ அருட்பணி ஆர். எஸ். டி சேரம்<br>◆ அருட்பணி வில்லி விக்ரமசிங்க | 28 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 9.2 இலங்கைச் சமுதாயத்தின் மனிதநேய செயல்கள், மனித உரிமை ஆகியவற்றில் திருச்சபை கொள்ளும் பங்கினை உணர்ந்து, நாட்டுப் பிரஜைக்குரிய கடமைகளை நிறைவேற்றுவர். | ● கிறிஸ்தவ அன்பும் சமுதாய நலனும்<br>● இலங்கைச் சமுதாயத்தில் நலன்புரிச் செயல்கள்<br>● மனித உரிமை வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம்<br>● மருத்துவப் பணி<br>● மனித உரிமை, சமூகப் பணிகளுக்கு பங்களித்தோர் | 15 |
| | 9.3 இலங்கைச் சமுதாயத்தில் கலையின் மேம்பாட்டிற்காக கிறிஸ்தவ ஒத்துழைப்பை உணர்ந்து தமது ஆற்றல்களை சமுதாயத்திற்கு அளிப்பர். | ● இலங்கையில் கலைக்கு கிறிஸ்தவ பங்களிப்பு<br>● பல்வேறு கலைப் பிரிவுகள்<br>◆ நூல்கள்<br>◆ சித்திரங்கள்<br>◆ சங்கீதம்<br>◆ நாட்டிய நாடகக் கலை<br>◆ சினிமாக்கலை | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **10.0 புதிய உலக நாகரீக மொன்றை உருவா க்கும் தி ரு ச் ச பை யி ன் முயற்சியில் ஈடுபட்டு ஆசியாவினதும் இலங் கையினதும் சமுதாய த் திற் காக திருச் சபையின் கடமை களில் பங்கு கொள்வர்.** | 10.1 இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் பண்பாடு, சமுதாய முன்னேற்றம் தொடர்பான படிப்பினை களைச் செயற்படுத்த முற்படுவர். | ● இரண்டாவது வத்திக்கான் பொதுச் சங்கம்<br>● பொதுச் சங்கத்தின் சமூக முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகள்<br>● பண்பாட்டை முன்னேற்றுவது தொடர்பான படிப்பினை<br>● குடும்பவாழ்வு தொடர்பான படிப்பினை<br>● சமாதனமும் ஒருமைப்பாடும் தொடர்பான படிப்பினை | 20 |
| | 10.2 கிறிஸ்தவ சபைத் தலைவர்களின் சமுதாய, பண்பாட்டு முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகளையும், வழிகாட்டல்களையும் கிறிஸ்தவ வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வர். | ● ஆசிய ஆயர்கள் மன்றத்தின் வெளியீடு (2000 - 2006)<br>● உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் வெளியீடு (2000 - 2006)<br>● ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின் வெளியீடு (2000 - 2006) | 14 |
| | 10.3 வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளோடும் ஒன்றித்து வாழ்வர். | ● கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான விழிப்புணர்வு, கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு<br>● கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக உழைத்தவர்கள் | 10 |

## 4.0 கற்றல் - கற்பித்தல் செயன்முறை

திருமறை அறிவானது, இறை - மனித உறவின் அடிப்படை அனுபவத்தில், மனித - மனித உறவின் முதிர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் இன்றியமையாததொன்றாகும். திருமறை, அறிவோடு மட்டும் முடிந்துவிடும் விடயம் அல்ல; அது ஒரு வாழ்க்கை முறை. திருமறை அறிவைத் தகுந்த மனப்பக்குவத்துடன் பெற்று, அதைத் தமது வாழ்க்கை அனுபவமாக்குவது முக்கியமானதாகும்.

இத்தகைய வாழ்க்கை அனுபவத்தை குடும்பத்திலும், பாடசாலையிலும், சமூகத்திலும் பெற்றுக் கொள்வதற்கும், திருச்சபையினதும் சமூகத்தினதும் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்வதற்கும் பல்வேறு அணுகுமுறைகளை மாணவர்கள் கையாள வேண்டும்.

தரம் 12,13 வகுப்புகளில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடும் மாணவர்கள் தமது எதிர்கால தொழில்சார் வாழ்கை நிலைகளைத் தெரிவு செய்யும் எதிர்நோக்குடன் செயற்படுகின்றனர். தொழில்சார் நிலைகளைத் தெரிவு செய்யத் திட்டமிடும் மாணவர்கள் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவராகத் தீர்மானங்கள் எடுக்கவும், அறநெறிவாழ்வை வாழவும், நற்பிரஜைகளாக தமது கடமைகளை நிறைவேற்றவும் வழிநடத்தப்படவேண்டும்.

தரம் 12,13 வகுப்புகளுக்கான பாடத்திட்டத்தில் தேர்ச்சிகளும், தேர்ச்சி மட்டங்களும் மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை மையமாகக் கொண்டுள்ளன. பல்வேறு அணுகுமுறைகள் செயற்திட்டங்கள் வழியாக எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை மாணவார்கள் அடையச் செய்வது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன:

- எண்ணக்கருப் படங்கள்
- செவ்வி காணல்
- பொருட்காட்சி
- விவாதம்
- குழுக் கலந்துரையாடல்
- கருத்தரங்கு
- உடனடிப் பேச்சு
- நடிபங்கு
- புத்தகங்கள், கட்டுரைகள் பற்றிய விமர்சனங்கள்
- களப்பிரயாணங்கள்
- வதிவிடத் தியானங்கள், வழிபாடுகள்.
- சமூக நோக்குச் செயற்றிட்டங்கள்.
- விரிவுரைகள்

## 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

- வருடத்திற்கு ஒரு தடவையாவது வதிவிட தியான நிகழ்வை ஏற்பாடு செய்து, மாணவர்களைச் செயற்பட ஊக்குவித்தல்.
- பாடசாலைத் தவணை ஒவ்வொன்றிலும், குறைந்தது ஒரு நாள், திருப்பலி ஏற்பாடு செய்து, மாணவர்களைப் பங்கு பெறச் செய்தல்.
- மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக, பங்குக் குருவினதும் துறவியரதும் உதவியைப் பெறல்.
- பாடசாலையில் மாணவர்களுக்கான கழகங்களை எற்படுத்தி, மாணவர்களை அவற்றில் அங்கத்தவராக்கி, அவர்கள் வாழ்வு வளமடைய வழிகாட்டல்.
- பாடசாலையில் கலாச்சார விழாக்களை அர்த்தமுள்ள முறையில் ஏற்பாடு செய்தல்.
- குழுக்களாக இறைவார்த்தையை வாசித்தல், கற்றல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்.
- இரக்கச் செயல்கள் செய்யும் சபைகளுக்கு உதவி புரியவும், அவற்றில் உறுப்பினராகச் சேரவும் ஊக்குவித்தல்.
- பாடசாலையில் மாணவரது நலனை வளர்த்து, தேவையிலிருக்கும் மாணவர்கள் மட்டில் அக்கறை கொள்ள வழிகாட்டல்.
- பாடசாலையில் சகோரத்துவம், ஒருமைப்பாடு, சகவாழ்வு, ஆகிய விழுமியங்களைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு வழிகாட்டல்.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தவணைக்குமென நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் என்பன உள்ளடங்கும் விதத்தில் கணிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாடத்திட்டமானது தரம் - 13 இன் இறுதியில் இடம் பெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான க.பொ.த. உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் தேசிய மட்டத்தில் நடத்தப்படுகின்ற முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தெளிவான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.